***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 179/2019 – P.W. 8 (LW10)***

| | |
|---|---|
| *Name* | விக்னேஷ்வரி பொது மருத்துவர்<br>நீடாமங்கலம் தனியார் மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 35 |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 05.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது நீடாமங்கலம் தனியார் மருத்துவமனையில் பொது மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 08.12.2018 ம் தேதியன்று மன்னார்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 45 வயது மதிக்கதக்க ஆண் செந்தில்வேலன், த/பெ. ரங்கசாமி, என்பவரை அவரது நண்பர் ஜெசிமர் ஜோசப் ராஜ் என்பவர் அழைத்து வந்தார். அவர் மன்னார்குடி 7 ம் தெருவில் வசித்து வருவதாக கூறினார். அவர் தனது நண்பர் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தபோது பின்னால் இருந்து நான்கு சக்கர வாகனம் இடித்ததாகவும், அதனால் அவர் முன்னால் இருந்த இன்னொரு நான்கு சக்கர வாகனத்தில் மீது விழுந்ததாக கூறினார். இந்த சம்பவம் 08.12.2018 ம் தேதியன்று இரவு 07.30 மணி வாக்கில் மன்னார்குடி ராஜாத்தி சூப்பர் மார்கெட் அருகே நடந்ததாக கூறினார். செந்தில்வேலவன் வரும்போதே இறந்த நிலையில் இருந்தார். அவரது இறப்பை 08.12.2018 ம் தேதியன்று இரவு 08.00 மணிவாக்கில் உறுதிசெய்து பிணவறைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி

வைத்தேன். **நான் செந்தில்வலேன் என்பவருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்து போன நபரை அழைத்து வந்த ஜெசிமர் ஜோசப் ராஜ் சுயநினைவுடன் இருந்தாரா என்றால் ஆமாம்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi